**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ஆம் நாள் திங்கட்கிழமை</u>

**<u>அ.வ.எண்.407/2015</u>**

ரத்தினகுமார், த/பெ. ஜெயம் சேனாபதி, இந்து வயது சுமார் 27, தாட்கோ காலனி, 3/36 கோயமுத்தூர் ரோடு, ஏ.சங்கம்பாளையம், பொள்ளாச்சி தாலூக்கா.

... வாதி

/ எதிர் /

1) செல்லமுத்துகவுண்டர், த/பெ. கருப்பசாமி கவுண்டர், இந்து வயது சுமார் 69, காபிலிபாளையம், குள்ளிச்செட்டிபாளையம், கோயில்பாளையம், பொள்ளாச்சி தாலூக்கா.

2) சொரூபராணி, த/பெ. செல்லமுத்து கவுண்டர், இந்து, வயது சுமார் 69, காபிலிபாளையம், குள்ளிசெட்டிபாளையம், கோயில்பாளையம், பொள்ளாச்சி தாலூக்கா.

3) மகாலிங்கம், த/பெ. செல்லமுத்துகவுண்டர், இந்து, வயது சுமார் 69, காபிலிபாளையம், குள்ளிசெட்டிபாளையம், கோயில்பாளையம், பொள்ளாச்சி தாலூக்கா ... பிரதிவாதிகள்

தாவா சொத்துக்களை நலந்திகிடு கலந்து பிரித்து அதில் 3ல் 2 பங்கு பாகத்தை தனி சுவாதீனத்துடன் வாதிக்கு பிரதிவாதிகளால் கிடைக்கும்படிக்கு பிரதிவாதிகளின் பேரில் ஒரு முதல்நிலை தீர்ப்பாணையும், தீர்ப்புரையும் பிறப்பிக்க கோரியும், தாவா செலவுத்தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் வேண்டியும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VII விதி 1ன்படி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் நாள் : 14.10.2015

தாவா வியாஜ்ஜிய மூல நாள் 10.07.2003, மற்றும் 14.12.2005 ஆகிய தேதிகளில் பொள்ளாச்சி தாலூக்கா. காபிலிபாளையம் கிராமத்தில் ஆரம்பம்.

தாவா மதிப்பு ரூ.70666.66/– மற்றும் இதற்குண்டான நீதிமன்றக் கட்டணம் ரூ.500/– தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 37(2)–ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

**<u>தாவா மதிப்பு விவரம்</u>**

பாகப்பிரிவினை கோரும் சொத்தின் மதிப்பு ரூ.1,06,000.00/-

அதில் வாதிக்குண்டான 2/3 பங்கு
வழக்கு சொத்தின் மதிப்பு ரூ.70,666.00/-

நீதிமன்ற கட்டணச் சட்டம் பிரிவு 37(2)ன் படி
செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.500/-

இவ்வழக்கானது கடந்த 14.10.2015 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினமே கோப்புக்கு எடுக்கப்பட்டு 24.01.2023 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வாதியின் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி அவர்கள் முன்னிலையாகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இளங்கோ அவர்கள் முன்னிலையாகியும், 3ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணியம் முன்னிலையாகியும் வழக்கு விசாரணையின்போது பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வழக்கறிஞரின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும் தீர்ப்பாணை :-

> முடிவில், இவ்வழக்கு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, வழக்கு ஏ அட்டவணை சொத்தில் 2/3 பாகத்திற்கு பாகப்பிரிவினை பெறுவதற்கு வாதி உரிமையுடையவர் என்றும், வாதியின் பங்கை பிரதிவாதிகள் தீர்ப்பு தேதியிலிருந்து 2 மாதத்திற்குள் பிரித்து கொடுக்கவேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கவேண்டி மனுதாக்கல் செய்ய வாதிக்கு அனுமதி அளித்தும் முதல்நிலை தீர்ப்பாணை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

**<u>செலவுத்தொகை பட்டியல்</u>**

<u>வாதி தரப்பில்</u> <u>பிரதிவாதி தரப்பில்</u>

(இருதரப்பிலும் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் செய்யவில்லை)

**<u>சொத்து விபரம்</u>**

**<u>A Schedule:</u>**

திருப்பூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், காபிலிபாளையம் கிராமம் கூட்டுப்பட்டா எண் 132, க.ச. 108 நெ.காலை பு.ஹெக்.2.92.5 க்கு பு.ஏ.7.23 இதில் எனக்கு ஷை பாகப்பத்திரப்படி பாத்தியப்பட்ட பு.ஏ.3.71 ல்

ஏற்கனவே நான் ஜே.பீட்டர் பிரேம் சக்கரவர்த்தி அவர்களுக்கு

கிரையம் கொடுத்த பு.ஏ.1.21 பூமிக்கும் வடக்கு

நடராஜன் பங்கு பூமிக்கும், கிழமேல் வண்டித்தடத்துக்கும் தெற்கு

எனது மீதி பூமிக்கும் மேற்கு

மேற்கண்ட பு.ஏ. 1.21 பூமிக்கும் கிழமேல் வண்டித்தடத்துக்கும் கிழக்கு

இதன் மத்தியில் சுமார் பு.ஏ. 0.29 விஸ்தீரணமுள்ள பூமியும், மேற்படி பூமியில் சுமார் 1 1/2 செண்ட் அளவில் வடக்குப்பார்த்துள்ள வில்லை வீடும், ஷை சொத்துக்கு தென்வடல் வடக்கிபாளையம் செல்லும் ரோட்டிலிருந்து கிழக்கே போகும் வண்டித்தடத்தின் வழியாக நீங்கள் உங்கள் வண்டி, வாகனங்கள் போகவர தடபாத்தியமும் சகிதம்.

**<u>B Schedule:</u>**

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உபபதிவு மாவட்டம் பொள்ளாச்சி வட்டம், காபிலிபாளையம் கிராமம், கூட்டுப்பட்டா எண்.132, க.ச. 108/2 B நெ.காலை பு.ஹெக். 2.92.5 க்கு பு.ஏ.7.23 இதில்

எனக்கு மேற்படி பாகசாசனப்படி ஏற்கனவே செல்லமுத்து கவுண்டர் ஆகிய நான் ஜே.பீட்டர். பிரேம் சக்கரவர்த்திக்கு

கிரயம் செய்து கொடுத்த பு.ஏ.1.21 பூமிக்கும் வடக்கு

நடராஜன் பங்கு பூமிக்கும், கிழமேல் வண்டித்தடத்துக்கும் தெற்கு

எனது மீதி பூமிக்கும் மேற்கு

மேற்கண்ட பு.ஏ.1.21 பூமிக்கும் கிழமேல் வண்டித்தடத்துக்கும் கிழக்கு

இதன் மத்தியில் சுமார் பு.ஏ.0.29 விஸ்தீரணமுள்ள பூமியும், மேற்படி பூமியில் சுமார் 1 1/2 செண்ட் அளவில் வடக்குப்பார்த்துள்ள வில்லை வீடும், ஷை சொத்துக்கு தென்வடல் வடக்கிபாளையம் செல்லும் ரோட்டிலிருந்து கிழக்கே போகும் வண்டித்தடத்தின் வழியாக நீங்கள் உங்கள் வண்டி வாகனங்கள் போகவர தடபாத்தியம் சகிதம். மேற்படி சொத்துக்களில் 2/3 பங்கு சொத்துக்கள் மட்டும்.

**C Schedule:**

திருப்பூர் ரிடிடு, நெகமம் சப்டி,பொள்ளாச்சி தாலூக்கா குள்ளிசெட்டிபாளையம் கிராமம் புலத்தில் யு.டி.ஆர்.பட்டாப்படி 8 நெ.பட்டா க.ச. 94/பி நெ.காலை பு.ஹெ.1.98.5 க்கு (ஏக்கர் 4.85 1/2) தீர்வை ரூ.6.69 இதில் க.ச. 95 நெ. காலைக்கும் வடக்கு க.ச.94 ஏ 4 காலைக்கும் கிழக்கு, க.ச. 94/பில் டி.ஷெட்யூல் கிருஷ்ணசாமி பங்கு பூமிக்கும் தெற்கு ஷை 94 ம் காலையில் பி.ஷெட்யூல் நடராஜ் பங்கு பூமிக்கும் மேற்கு, இதன் மத்தியில் புஞ்சை ஹெக்டேர் 0.94.5 க்கு (ஏக்கர் 0.11) தீர்வை ரூ.0.15 இந்த பூமியும் இதற்குள்ள மாமூல் தடபாத்தியங்களும் சகிதம்.

திருப்பூர் ரிடிடு, பொள்ளாச்சி சப்டி, பொள்ளாச்சி தாலூக்கா, காபிலிபாளையம் கிராமம் புலத்தில் யு.டி.ஆர்.132 நெ. பட்டா க.ச. 108 நெ.காலை பு.ஹெக்.2.92.5 க்கு (ஏக்கர் 7.23) தீர்வை ரூபாய் 9.94 இதில் ஷை காலையில் பிஷெடியூல் நடராஜ் பங்கு பூமிக்கும் இ ஷெடியூல் சின்னத்துறை பங்கு பூமிக்கும் வடக்கு க.ச. 110 நெ.காலைக்கும் வடக்கு 111 நெ.காலைக்கும் ஷை

108 நெ.காலையில் பொதுக்கிணர் கிணற்றடிக்கும் இ ஷெடியூல் பாக பூமிக்கும் மேற்கு, ஷை 108 ல் இந்த பாகஸ்தரின் கீழ்கண்ட 2 வது அயிட்ட பூமிக்கும் பொதுக்கிணர் கிணற்றடிக்கும் க.ச.106 பி/106/ஏ 4, 106/ஏ 5 க.ச.107 நெ.காலைகளுக்கும் தெற்கு க.ச.155 நெ.காலைக்கும் க.ச. 106 பி காலைக்கும் ஷை 108 ல் இ ஷெடியூல் பாக பூமிக்கும் கிழக்கு இதன் மத்தியில் புஞ்சை ஹெக்டேர் 1.50.0 க்கு (ஏக்கர் 3.71) தீர்வை ரூ.5.08 இந்த பூமியும்,

பின்னும் ஷை 108 நெ.காலையில்,

| | |
|---|---|
| மேற்கண்ட 3.71 பூமிக்கும் | வடக்கும் கிழக்கும் |
| கீழ்கண்ட 2 வது அயிட்ட பூமிக்கும் | மேற்கு |
| க.ச. 106/பிக்கும் | தெற்கு |

இதன் மத்தியில் புஞ்சை ஹெக்டேர் 0.12.5 க்கு (ஏக்கர் 0.31) தீர்வை ரூபாய் 0.42 இந்த பூமியும் இதிலுள்ள துரஸ்துகிணர், கிணற்றடி நிலம், ஷை கிணற்றில் எஸ்.சி.நெ.133 ல்ன்படி வைக்கப்பட்டுள்ள 5 எச்.பி மின்சார மோட்டார் பம்பு செட் இவைகளின் பொதுவில் 1/3 மூன்றில் ஒரு பங்கும், ஷை 1/3 பங்கு புஞ்சை ஹெக்டேர் 0.04.5 க்கு (ஏக்கர் 0.11) தீர்வை ரூ.0.15 ஆக கிராமம் 2 க்கு ஒட்டு புஞ்சை ஹெக்டேர் 1.59.5 க்கு (ஏக்கர் 3.95) தீர்வை ரூபாய் 5.38 இந்த பூமிகளும்,

ஷை 108 நெ.காலையில் 3.71 பூமியிலுள்ள 20 (இருபது) தென்னை மரங்களும் ஷை பூமிகளுக்கு மாமூல்படி பாய்ந்து வரும் அரணி வாய்க்கால் மடை பி.ஏபி. தண்ணீர் பாத்தியங்களும் சகிதம். மற்றும் ஷை பாக சாசனத்தில் கண்டுள்ள பொதுஷராவில் கண்டுள்ளபடியான பாத்தியங்களும் சகிதம்.

மேற்படி பூமிகளின் க.ச.108 நெ.காலையில் ஏற்கனவே ஒரு பிரேம் சக்கரவர்த்திக்கு கிரையம் கொடுத்த பு.ஏ.1.21 பூமிகள் நீங்கலாக மீதம் உள்ள பு.ஏ.2.50 பூமிகள் சகிதம்.

2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்) N.பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------------------

**<u>தீர்ப்பாணை</u>**
அ.வ.எண் 407/2015
நாள்.30.01.2023
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

-----------------------------------------------